**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 9 /2023 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு. பாண்டியராஜன் |
| Father’s/Husband Name | | திரு. ஜெகநாதன் |
| Village | | துவரங்குறிச்சி |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 36/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17th day of July 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் 914 தமிழ்செல்வன் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் துவரங்குறிச்சி பொந்தையன் தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது துவரங்குறிச்சில் டீக்கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகள் ராஜேந்திரன், ரவிகுமார், விஜயக்குமார் ஆகியோரை தெரியும். என் மாமா பெயர் குணசேகரன், மஞ்சவயலில் உள்ள அவரது தோப்பில் மீன் குட்டை உள்ளது . அதை நான் பராமரித்து வருகிறேன். கடந்த 25.08.2019 ந் தேதி மாலை 3.00 மணியளவில் நானும் எனது நண்பர்கள் மாதவன் மற்றும் சுரேஷ் உடன் மீன் குட்டை பார்க்க சென்று இருந்தேன். என் அக்கா தோப்பிலுள்ள தென்னம் பிள்ளைகளை சித்ரகலாவின் மாடு மேய்ந்து கொண்டிருந்தது. அதை நான் விரட்டிவிட்டேன். என் நண்பர் சுரேஷ் க்கு போன் வந்ததால் அவர் கிளம்பிவிட்டார். நானும் என் நண்பர் மாதவனும் வீட்டிற்கு பைக்கில் போயிட்டு இருந்தோம். எங்கள் தோப்பிலிருந்து சுமார் 500 அடி

தொலைவில் பரகலக்கோட்டை கோவிலுக்கு செல்லும் ரோட்டில் சென்றுகொண்டிருந்தோம்.

ஆஜர் எதிரிகள் மூவரும் என்னை வழிமறித்து தேவடியா, குச்சிகாரி மகனே என்று அசிங்கமாக பேசினார்கள். நான் எதற்காக பேசிகிறீர்கள் என்று கேட்டதற்கு எங்கள் போர்செட்டை ஏன்டா உடைத்தீர்கள் என்று சொல்லி என்னையும் என் நண்பன் மாதவனையும் இரும்பு பைப்பு மற்றும் அருவாளால் தாக்கினார்கள். எனக்கு வலது காலில் முட்டிக்கு கீழே அருவாள் வெட்டு மற்றும் வலது பக்க தொடையில் இரும்பு பைப்பால் தாக்கியதில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

என் நண்பன் மாதவனுக்கு கையில் வெட்டு விழுந்தது. பின்பு என்னை வலுகட்டாயமாக தூக்கிகொண்டும், என் நண்பர் மாதவனை அழைத்துக்கொண்டும் பக்கத்தில் உள்ள எதிரிகள் போர்செட்க்கு கொண்டு போய் எங்கள் இருவரையும் கயிற்றால் கட்டி அடித்தார்கள். பின்பு என் அக்கா செல்வி, சுரேஷ், ராஜேந்திரன் மற்றும் சிவாஜி சம்பவ இடத்திற்கு வந்து ஏன் அடிக்கிறீர்கள் எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் அதை கேட்காமல் மீண்டும் மீண்டும் எங்களை அடித்தார்கள். எனது காலில் இரத்தபோக்கு அதிகமானதால் நான் இறந்துவிடுவேன் என்று பயந்து எதிரிகளே என்னை TATA Magic வண்டியில் தூக்கி போட்டுக்கொண்டு அதிராம்பட்டிணம் காவல் நிலையத்திற்கு வந்து விட்டுவிட்டு எதிரிகள் ஓடிவிட்டார்கள். பின்பு அங்கேயே நான் புகார் கொடுத்தேன். பின்பு என் அக்கா மற்றும் உறவினர்கள் காவல் நிலையம் வந்துவிட்டனர். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும்.

என்னை அடிக்க பயன்படுத்திய இரும்பு கம்பி என்னிடம் காட்டப்படுவது தான்.அது **அ.ச.பொ.1** ஆகும். எதிரிகள் என்னை வெட்ட பயன்படுத்திய அருவா என்னிடம் காட்டப்படுவது தான் , அது **அ.ச.பொ.2** ஆகும். எதிரிகள் என்னையும் மாதவனையும் கட்டப்பயன்படுதிய கயிறு என்னிடம் காட்டப்படுவது தான், அது

**அ.ச.பொ.**3 வரிசை ஆகும். பின்னர் என்னை சிகிச்சைக்காக அதிராம்பட்டிணம் அரசு மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி கொடுத்து பின் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். 15 நாட்கள் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்த பின் பட்டுக்கோட்டை செல்லப்பன் மருத்துவமனையில் சேர்ந்தேன்.

என்னை போர்செட்டில் வைத்து அடிக்கும்போது உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் ஆஜரிலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை